# ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## மீனாம்பாள் சிவராஜ் அம்மையின் வீர முழக்கம்.

(ஒரு நிருபர்)

வேலூர், மே 30.

29-5-38 ஞாயிறன்று மாலை 6-30 மணிக்கு வேலூர் அம்பேத்கார் மைதானத்தில் ஆதிதிராவிடர்களின் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. சோலார் தங்கவயல் தோழர் ஜி. அப்பாதுரையார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். சென்னை தோழர் மீனாம்பாள் அம்மையார் அவர்கள் ஹிந்தியினால் ஆதிதிராவிட மக்களுக்கும் தமிழர்களுக்கும் ஏற்படும் இன்னல்களைக்குறித்து மிகவிளக்கமாய் பேசியதுடன் காங்கரஸ் மந்திரிசபை ஏற்பட்ட பிறகு குறிப்பாக ஆதிதிராவிட மக்களுடைய கல்விக்கு ஏற்பட்டிருக்கிற தீங்குகளையும், அரசியலார் ஆதிதிராவிடர்களுக்கு இதுவரை அளித்துவந்த அரைச் சம்பள விதத்தை இம்மந்திரிசபையார் ஒழித்துவிட்டதையும் குறித்து வெகு அழகாகப் பேசினார்கள். இடை இடையே மக்கள் கையொலிசெய்து ஆரவாரம்செய்து கொண்டே இருந்தார்கள். பிறகு தலைவர் தமது முடிவுரையில் தமிழைப்பற்றியும் ஹிந்தியால் வரும் கேடுகளைப்பற்றியும், ஆதிதிராவிடர்கள் ஹிந்தியை எதிர்க்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் பேசினார். நன்றி கூறியதுடன் இக் கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிவுற்றது. தோழர் அண்ணாதுரை அவர்கள் இதற்கு முன்னே இங்கு பேசியதினாலும், மீனாம்பாள் அவர்கள் ஹிந்தியால்வரும் கெடுதலை நன்கு விளக்கியதாலும், பொது மக்களிடை குறிப்பாக தமிழ் இளைஞரிடை தமிழ்ப்பற்றும் ஹிந்தி எதிர்ப்புப் பேச்சும் பரவி வருகிறதெனலாம்.